# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| 9th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| 8th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| 7th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| 6th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| 1st to 5th Standard | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| Exams | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
|---|---|---|---|---|---|---|
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| Portal | Matrimony | Mutual Transfer | Job Portal |
|---|---|---|---|

| Volunteers | Centum Team | Creative Team | Key Answer Team |
|---|---|---|---|

| Downloads | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
|---|---|---|---|---|---|---|
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |


**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

NEW SYLLABUS

பிரிலியண்ட்'ஸ்

# சமூக அறிவியல்

## பருவம் - 1, 2 & 3

இலவசம்

வரைபட பயிற்சி புத்தகம்

7



- பாடநூல் வினாக்கள் விடைகளுடன்.
- கூடுதல் வினாக்கள் விடைகளுடன்.
- பருவ மதிப்பீடு வினாத்தாள்கள்.
- வளரறி மதிப்பீடு (செயல்பாடு - 4, தேர்வு - 4)
- செயல்முறை படங்கள்



100% SUCCESS

BRILLIANT PUBLICATIONS®
Madurai Tamilnadu.

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பிரிலியண்ட்'ஸ்

# சமூக அறிவியல் 7

## பருவம் - I, II & III

(புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டது)

### சிறப்பு அம்சங்கள்

**தமிழ்நாடு அரசின்** புதிய பாடத்திட்டத்தின்படி பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து பிரிவு வினாக்களுக்கும் விடைகள் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

**கூடுதலாக** அனைத்துப் பாடங்களுக்கும் மனவரைபடம், சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக, கோடிட்ட இடங்களை நிரப்புக, பொருத்துக, சிறுவினாக்கள் மற்றும் பெருவினாக்களுக்கு எளிமையாக விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

வளரறி மதிப்பீடு (செயல்பாடு – 4 மற்றும் தேர்வு – 4)

பருவ மதிப்பீடு

செயல்முறை படங்கள்

**கூடுதல் வரைபட பயிற்சி புத்தகம்**

(இரண்டு புத்தகங்களின்) **விலை: ரூ.160/-**

© All rights reserved

BRILLIANT PUBLICATIONS MADURAI

**பிரிலியண்ட் பப்ளிகேஷன்ஸ்®**

20/13, வடக்கு சித்திரை வீதி, மதுரை – 625001.

போன்: 9442563752, 9843363752, 9487563752, 9443063752

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## முதல் பருவம்


| அலகு | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள் | 5 |
| 2. | வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் | 13 |
| 3. | தென் இந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் | 22 |
| 4. | டெல்லி சுல்தானியம் | 31 |
| | **புவியியல்** | |
| 1. | புவியின் உள்ளமைப்பு | 39 |
| 2. | நிலத்தோற்றங்கள் | 48 |
| 3. | மக்கள் தொகையும், குடியிருப்புகளும் | 57 |
| | **குடிமையியல்** | |
| 1 | சமத்துவம் | 67 |
| 2 | அரசியல் கட்சிகள் | 72 |
| | **பொருளியல்** | |
| 1 | உற்பத்தி | 79 |
| | வளரறி மதிப்பீடு அ மற்றும் ஆ (செயல்பாடு மற்றும் தேர்வு) | 86 |
| | பருவ மதிப்பீடு | 92 |
| | செயல்முறை படங்கள் | 95 |


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## இரண்டாம் பருவம்


| அலகு | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | விஜயநகர், பாமனி அரசுகள் | 99 |
| 2. | முகலாயப் பேரரசு | 107 |
| 3. | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி | 115 |
| | **புவியியல்** | |
| 1. | வளங்கள் | 123 |
| 2. | சுற்றுலா | 131 |
| | **குடிமையியல்** | |
| 1 | மாநில அரசு | 140 |
| 2 | ஊடகமும் ஜனநாயகமும் | 148 |
| | வளரறி மதிப்பீடு அ மற்றும் ஆ (செயல்பாடு மற்றும் தேர்வு) | 154 |
| | பருவ மதிப்பீடு | 160 |
| | செய்முறை படங்கள் | 163 |


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## மூன்றாம் பருவம்


| அலகு | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும் | 167 |
| 2. | தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும் | 175 |
| 3. | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 184 |
| | **புவியியல்** | |
| 1. | கண்டங்களை ஆராய்தல் – வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா | 193 |
| 2. | நிலவரைபடத்தை கற்றறிதல் | 204 |
| 3. | இயற்கை இடர்கள் – பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல் | 212 |
| | **குடிமையியல்** | |
| 1 | பெண்கள் மேம்பாடு | 220 |
| 2 | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 226 |
| 3 | சாலைப் பாதுகாப்பு | 232 |
| | **பொருளியல்** | |
| 1 | வரி மற்றும் அதன் முக்கியத்துவம் | 239 |
| | வளரறி மதிப்பீடு அ மற்றும் ஆ (செயல்பாடு மற்றும் தேர்வு) | 247 |
| | பருவ மதிப்பீடு | 253 |
| | செயல்முறை படங்கள் | 255 |


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com


# வரலாறு

## அலகு – 1

## இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்



### மன வரைபடம்




BRILLIANT PUBLICATIONS

### மதிப்பீடு

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்:

1. **................ என்பவை பாறைகள், கற்கள், கோவில் சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.**

   அ) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள்   ஆ) பயணக்குறிப்புகள்
   இ) நாணயங்கள்   ஈ) பொறிப்புகள்

   **விடை: ஈ) பொறிப்புகள்**

2. **கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ................ ஆகும்.**

   அ) வேளாண்வகை   ஆ) சாலபோகம்   இ) பிரம்மதேயம்   ஈ) தேவதானம்

   **விடை: ஈ) தேவதானம்**

www.Padasalai.Net www.CBSEtips.in

3. ................. களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென்று அறியப்படுகிறது.

அ) சோழர் ஆ) பாண்டியர் இ) ராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள்

**விடை : அ) சோழர்**

4. முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் ................. ஆகும்.

அ) அயினி அகபரி ஆ) தாஜ் – உல் – மா – அசிர்

இ) தசுக் – இ – ஜஹாங்கீரி ஈ) தாரிக் – இ – பெரிஷ்டா

**விடை: ஆ) தாஜ் - உடல் - மா - அசிர்**

5. அராபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் ................. ஆவார்.

அ) மார்க்கோபோலோ ஆ) அல் – பருனி

இ) டோமிங்கோ பயஸ் ஈ) இபன் பதூதா

**விடை: ஆ) அல் - பருனி**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. ................. கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.

**விடை: உத்திர மேரூர்**

2. தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர் ................. ஆவார்.

**விடை: முகமது கோரி**

3. ஒரு ................. என்பது 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டிருந்தது.

**விடை: ஜிட்டல்**

4. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர் ................. ஆவார்.

**விடை: மின்கஜ் - உஸ் - சிராஜ்**

5. கி.பி.1420 இல் விஜயநகருக்கு வருகைபுரிந்த இத்தாலியப் பயணி ................. ஆவார்.

**விடை: நிக்கோலோ கோண்டி**

## III. பொருத்துக:

| | அ | ஆ |
|---|---|---|
| 1. | கஜுராகோ | அ) ஒடிசா |
| 2. | கொனாரக் | ஆ) ஹம்பி |
| 3. | தில்வாரா | இ) மத்தியப்பிரதேசம் |
| 4. | விருப்பாக்சா | ஈ) ராஜஸ்தான் |

**விடை:**

| | அ | ஆ |
|---|---|---|
| 1. | கஜுராகோ | இ) மத்தியப்பிரதேசம் |
| 2. | கொனாரக் | அ) ஒடிசா |
| 3. | தில்வாரா | ஈ) ராஜஸ்தான் |
| 4. | விருப்பாக்சா | ஆ) ஹம்பி |


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
BRILLIANT PUBLICATIONS

www.Padasalai.Net www.CBSEtips.in

## IV. சரியா ? தவறா?

1. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.

   **விடை: சரி**

2. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் அரசியல் நிலை குறித்த தகவல்களை நமக்கு வழங்குகின்றன.

   **விடை: தவறு**

3. தாமிரத்தின் விலை அதிகமாக இருந்தால் அரசு ஆணைகளையும் அரசவை நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்படுத்தப்பட்டன.

   **விடை: சரி**

4. டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துகீசியப்பயணி கி.பி. 1522 இல் சோழப்பேரரசுக்கு வருகை புரிந்தார்.

   **விடை: தவறு**

## V. அ) கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்:

1. **கூற்று** : முகமது கோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.

   **காரணம்** : இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.

   அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

   ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

   இ) கூற்று தவறு, காரணம் சரி.

   ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

   **விடை: அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**

### ஆ) தவறான இணையைக் கண்டறியவும்:

1. மதுரா விஜயம் – கங்காதேவி
2. அபுல் பாசல் – அயினி அக்பரி
3. இபன் பதூதா – தாகுயூக் – இ – ஹிந்த்
4. அமுக்தமால்யதா – கிருஷ்ணதேவராயர்

   **விடை: இபன் பதூதா - தாகுயூத் - இ - ஹிந்த்**

### இ) பொருந்தாததைக் கண்டுபிடி:

பொறிப்புகள், பயணக்குறிப்புகள், நினைவுச் சின்னங்கள், நாணயங்கள்.

## VI. ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்:

1. **நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?**

   நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் நாதமுனி.

2. **'தசுக்'எனும் வார்த்தையின் பொருள் யாது?**

   தசுக் என்னும் வார்த்தையின் பொருள் சுயசரிதை.

3. **ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் என்ன?**

   ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் தசுக் – இ – ஜஹாங்கீரி.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**4. வரலாற்றை அறிந்து கொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக.**

வரலாற்றை அறிந்து கொள்வதற்கான முதல் நிலைச் சான்றுகள் , இரண்டாம் நிலைச் சான்றுகள் என இருவகைச் சான்றுகள் உதவுகின்றன.

**5. இடைக்காலத்தில் கட்டப்பட்ட முக்கிய மசூதிகளையும், கோட்டைகளையும் பட்டியலிடவும்.**

* **முக்கிய மசூதிகள்:** குவ்வத் – உல் – இஸ்லாம் மசூதி மோத்–கி–மசூதி, ஜமா மசூதி, பதேப்பூர் சிக்ரி தர்கா, சார்மினார்.
* **முக்கிய கோட்டைகள்:** ஆக்ரா கோட்டை, சித்தூர் கோட்டை, குவாலியர் கோட்டை, டெல்லி செங்கோட்டை, தௌலதாபாத் கோட்டை, பிரோஷ் ஷா கொத்தளம் போன்றவை.

**6. இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகைதந்த முக்கியமான அயல்நாட்டுப் பயணிகளின் பெயர்களைக் கூறவும்.**

மார்க்கோபோலோ, அல்–பரூனி, இபன் பதூதா, நிகோலோ பயஸ் போன்றோர் இடைக் காலத்தில் இந்தியா வந்த வெளிநாட்டு பயணிகள் ஆவர்.

## VII. விடையளிக்கவும்:

**1. டெல்லி சுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.**

* டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தை அறிந்துகொள்ள 'ஜிட்டல்' என்னும் செப்பு நாணயங்கள் பயன்படுகின்றன.
* இல்துமிஷ் அறிமுகம் செய்த 'டங்கா' எனப்படும் வெள்ளி நாணயங்கள், அலாவுதீன் கில்ஜியின் தங்க நாணயங்கள், முகமதுபின் துக்ளக்கின் செப்பு நாணயங்கள் போன்றவை நாட்டின் பொருளாதார வளம் அல்லது நலிவு ஆகியவற்றை தெளிவுபடுத்துகிறது.

## VIII. கட்டக வினாக்கள்:

| | |
|---|---|
| 1. ................. பேரரசர் ஔரங்கசிப்பின் அரசவை அறிஞர் ஆவார். **விடை: காஃபிகான்** | 2. திருவாலங்காடு செப்பேடுகள் ................. காலத்தைச் சேர்ந்ததாகும். **விடை: முதலாம் இராஜேந்திர சோழன்** |
| 3. ................. என்பது கல்விக் கூடங்களைப் பராமரிப்பதற்கான நிலமாகும். **விடை: சாலபோகம்** | 4. பெரியபுராணத்தைத் தொகுத்தவர் .......... ஆவார். **விடை: சேக்கிழார்** |
| 5. ................. ஓர் அராபியச் சொல், இதன் பொருள் 'வரலாறு' என்பதாகும். **விடை: தாரிக் அல்லது தாகுயூக்** | 6. முகமதுபின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே அமைந்திருந்த ................. க்கு மாற்றினார். **விடை: தேவகிரி** |

## IX. உயர் சிந்தனை வினா:

**1. “நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதாரச் செழிப்பைச் சுட்டிக்காட்டுகிறது'. விளக்குக.**

* நாணயங்கள் உள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதார நிலை குறித்த செய்திகளை வழங்குகிறது.
* நாணயங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள தங்கம், வெள்ளி மற்றும் செப்பு போன்ற உலோகங்களை வைத்து பொருளாதார செழிப்பு நிலையை அறியலாம்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net

# கூடுதல் வினாக்கள்

www.CBSEtips.in

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்:

**1. திருவாலங்காடு செப்பேடுகளை வெளியிட்டவர் ................ .**

அ) ராஜராஜ சோழன் ஆ) இராஜேந்திர சோழன்

இ) குலோத்துங்கன் ஈ) விஜயாலயன்

**விடை: ஆ) இராஜேந்திர சோழன்**

**2. உத்திர மேரூர் கல்வெட்டு அமைந்துள்ள மாவட்டம் ................ .**

அ) மதுரை ஆ) சேலம் இ) காஞ்சிபுரம் ஈ) விருதுநகர்

**விடை: இ) காஞ்சிபுரம்**

**3. செப்பு நாணய முறையை அறிமுகப்படுத்தியவர் ................ .**

அ) முகமது – பின் – துக்ளக் ஆ) தாஜ் – உல் – மா – அசிர்

இ) தசுக் – இ – ஜஹாங்கீரி ஈ) தாரிக் – இ – பெரிஷ்டா

**விடை: அ) முகமது-பின்-துக்ளக்**

**4. தேவாரத்தைத் தொகுத்தவர் ................ .**

அ) நம்பியாண்டார் நம்பி ஆ) கம்பர்

இ) சேக்கிழார் ஈ) ஜெயதேவா

**விடை: அ) நம்பியாண்டார் நம்பி**

**5. மதுரா விஜயத்தை இயற்றியவர் ................ .**

அ) நம்பியாண்டார் நம்பி ஆ) கங்காதேவி

இ) சேக்கிழார் ஈ) கம்பர்

**விடை: ஆ) கங்காதேவி**

**6. பிருதிவிராஜ் ரசோ எந்த அரசர்களின் வரலாற்றைக் கூறுகிறது?**

அ) மராத்தியர்கள் ஆ) இராஜபுத்திரர்கள்

இ) விஜய நகர அரசர்கள் ஈ) சோழர்கள்

**விடை: ஆ) இராஜபுத்திரர்கள்**

**7. முகமது பின் துக்ளக்கின் அரசவை வரலாற்றாசிரியர் ................ .**

அ) முகமது – பின் – துக்ளக் ஆ) தாஜ் – உல் – மா – அசிர்

இ) ஜீயா – உத் – பரணி ஈ) தாரிக் – இ – பெரிஷ்டா

**விடை: இ) ஜீயா - உத் - பரணி**

**8. தாரிக் – இபதானி எனும் நூலை வெளியிட்ட ஆண்டு ................ .**

அ) கி.பி. 1585 ஆ) கி.பி. 1597 இ) கி.பி. 1575 ஈ) கி.பி. 1595

**விடை: ஈ) கி.பி. 1595**

**9. பாண்டிய அரசவைக்கு வந்த வெளிநாட்டுப் பயணி ................ .**

அ) மார்க்கோபோலோ ஆ) நிக்கோலோ காண்டி

இ) அல்பெருனிள் ஈ) இபின் பதூதா

**விடை: அ) மார்க்கோபோலோ**

BRILLIANT PUBLICATIONS



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

10. ரிக்ளா என்பது யாருடைய பயணக்குறிப்புகள் ................ .

அ) மார்க்கோபோலோ ஆ) அல்பெருனி

இ) இபின் பதூதா ஈ) நிக்கோலோ காண்டி

**விடை: இ) இபின் பதூதா**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. ................ நிலங்கள் என்பன பிராமணர் அல்லாதோருக்கு சொந்தமான நிலங்களாகும்.
   **விடை: வேளாண் வகை**
2. அன்பில் செப்பேடுகளை வெளியிட்டவர் ................ .
   **விடை: சுந்தர சோழன்**
3. உத்திரமேரூர் கல்வெட்டில் ................ கிராம நிர்வாக முறை குறிப்பிடப்பட்டுள்ளது.
   **விடை: சோழர்களின்**
4. வெள்ளி டங்கா நாணயத்தை அறிமுகப்படுத்தியவர் ................ .
   **விடை: இல்துமிஷ்**
5. நாலாயிர திவ்ய பிரபந்தத்தை தொகுத்தவர் ................ .
   **விடை: நாதமுனி**
6. பெரியபுராணத்தை எழுதியவர் ................ .
   **விடை: சேக்கிழார்**
7. கம்ப இராமாயணத்தை எழுதியவர் ................ .
   **விடை: கம்பர்**
8. ................ அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோரால் இயற்றப்பட்டது.
   **விடை: தேவாரம்**
9. திருவாசகத்தை எழுதியவர் ................ .
   **விடை: மாணிக்கவாசகர்**
10. ................ கீத கோவிந்தத்தை 12ம் நூற்றாண்டில் எழுதினார்.
    **விடை: ஜெய தேவா**
11. கபீர் ................ம் நூற்றாண்டைச் சேர்ந்த கவிஞர்.
    **விடை: 15**
12. ஆமுக்தமால்யதாவை இயற்றியவர் ................ .
    **விடை: கிருஷ்ணதேவராயர்**
13. "பிருதிவிராஜ் ரசோ" என்ற நூலை எழுதியவர் ................ .
    **விடை: சந்த் பர்தாய்**
14. கல்ஹணர் எழுதிய நூல் ................ .
    **விடை: இராஜதரங்கிணி**
15. ஹசன் நிஜாமி எழுதிய நூல் ................ .
    **விடை: தாஜ்-உல்-மாஅசீர்**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## III. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1. | மார்க்கோபோலோ | அ) கஜினி |
| 2. | அல்பெருனி | ஆ) மொராக்கோ |
| 3. | இபின் பதூதா | இ) வெனிஸ் |
| 4. | டோமிங்கோபயஸ் | ஈ) இத்தாலி |
| 5. | நிக்கோலோ காண்டி | உ) போர்ச்சுக்கல் |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. | மார்க்கோபோலோ | இ) வெனிஸ் |
| 2. | அல்பெருனி | அ) கஜினி |
| 3. | இபின் பதூதா | ஆ) மொராக்கோ |
| 4. | டோமிங்கோபயஸ் | உ) போர்ச்சுக்கல் |
| 5. | நிக்கோலோ காண்டி | ஈ) இத்தாலி |

## IV. சரியா? தவறா?

1. ஜிட்டல் என்பது 4, 6 வெள்ளி மணிகளைக் கொண்டதாகும்.

   **விடை: தவறு**

2. மின்கஜ்உஸ் சிராஜ் சுல்தான் நசீர்உத்தின் முகமதுவால் ஆதரிக்கப்பட்டார்.

   **விடை: சரி**

3. கபீகான் அக்பரின் அரசவையில் இருந்தார்.

   **விடை: தவறு**

## V. அ) கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்:

1. **கூற்று** : இஸ்லாமிய பாரசீகத்தின் நடைமுறைகளின் பனையோலைகளிலும், காகதித்திலும் எழுதப்பட்டன.

   **காரணம்** : செப்புப் பட்டயங்களின் விலை அதிகமாக இருந்தது.

   அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

   ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

   இ) கூற்று தவறு, காரணம் சரி.

   ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

   **விடை: அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**

2. **கூற்று** : சோழர்காலம் பக்தி இலக்கியத்திற்கு பெயர் பெற்றது.

   **காரணம்** : தென்னிந்தியாவில் 12 ம் நூற்றாண்டில் பக்தி இயக்கம் ஏற்பட்டது.

   அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

   ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

   இ) கூற்று தவறு, காரணம் சரி.

   ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

   **விடை: அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**

BRILLIANT PUBLICATIONS


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆ) பொருந்தாததைக் கண்டுபிடி.

பெரிய புராணம், கம்பராமாயணம், திருவாசகம், **தாரிக் இ பெரிஸ்டா**

## VI. ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்:

**1. பொறிப்புகள் என்றால் என்ன?**

பொறிப்புகள் என்பன பாறைகள், கற்கள், கோயிற்சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மேல் பொறிக்கப்படும் எழுத்துகளாகும்.

**2. சோழ அரசர்களால் வழங்கப்பட்ட பலவகை நிலக்கொடைகளின் பெயர்களைக் கூறுக.**

வேளாண் வகை, பிரம்மதேயம், சாலபோகம், தேவதானம், பள்ளிச் சந்தம் போன்றவை.

**3. நினைவுச் சின்னங்கள் என்பன யாவை?**

கோயில்கள், அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், கோட்டைகள், கோபுரங்கள், ஸ்தூபிகள் போன்றவை நினைவுச் சின்னங்களாகும்.

**4. டெல்லி சுல்தானிய கட்டிடக்கலையின் முக்கிய கூறுகள் யாவை?**

வளைவுகள், குவிமாடங்கள், ஒடுங்கிய வடிவக் கோபுரங்கள் போன்றவை டெல்லி சுல்தானிய கட்டிடக்கலையின் முக்கியக் கூறுகள் ஆகும்.

**5. மார்க்கோபோலோ – சிறுகுறிப்பு வரைக.**

* 13ம் நூற்றாண்டில் வெனிஸ் நகரத்தைச் சேர்ந்த பயணி மார்க்கோபோலோ பாண்டிய அரசவைக்கு வந்தார். சீனாவிலிருந்து அவர் கப்பல் வழியாய் காயல் என்னும் ஊருக்கு இருமுறை வந்துள்ளார். அரேபியாவிலிருந்தும்
* பாரசீகத்திலிருந்தும் ஆயிரக்கணக்கில் குதிரைகள் தென்னிந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டதாக மார்க்கோபோலோ குறிப்பிடுகிறார்.

## VII. விடையளிக்கவும்:

**1. சான்றுகள் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக் காட்டுடன் விவரி?**

கடந்த காலத்தை மறுகட்டுமானம் செய்வதற்கு உதவக்கூடிய ஆதாரங்களாவன ஆவணங்கள் அல்லது பதிவுகளே சான்றுகள் எனப்படும். சான்றுகள் இருவகைப்படும். அவை,

**முதல் நிலைச் சான்றுகள்:**

* பொறிப்புகள், நினைவுச்சின்னங்கள், நாணயங்கள் ஆகியவையும் அவற்றிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற செய்திகளும் முதல்நிலைச் சான்றுகள் ஆகும்.
* **எ.கா:** முதல் கல்வெட்டு, தஞ்சை பெரியகோவில், ஜிட்டல் செப்பு நாணயம்.

**இரண்டாம் நிலைச் சான்றுகள்:**

* இலக்கியங்கள், காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள், பயணக்குறிப்புகள், வரலாற்று நூல்கள், சுயசரிதைகள் ஆகியன இரண்டாம் நிலைச் சான்றுகளாகும்.
* **எ.கா:** பெரிய புராணம், மதுராவிஜயம், இபன் பதூதாவின் ரிக்ளா.

**2. செப்புப்பட்டயங்கள் தரும் செய்திகள் யாவை?**

* கொடைகள் வழங்கப்பட்டதைக் குறிக்கும் சட்டப்பூர்வமான ஆவணங்கள் செப்புப்பட்டயங்கள்,
* 13ம் நூற்றாண்டு முதல் இஸ்லாமிய பாரசீக நடைமுறையினால் செப்புப்பட்டயங்கள் விலை அதிகரித்தது
* எனவே மாற்றாக குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்பாட்டுக்கு வந்தன.
* பிற்காலச் சோழர் காலத்தில் பல செப்புப்பட்டயங்களில் கொடை வழங்கிய விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
* இவற்றில் நிலக் கொடை வழங்கியவர், கொடை பெற்றவர் ஆகியோர் குறித்த செய்திகள் அடங்கியுள்ளன.
* முதலாம் ராஜேந்திர சோழனின் திருவாலங்காடு செப்பேடுகளும், சுந்தரச் சோழனின் அன்பில் செப்பேடுகளும் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகளாகும்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com